J. R. T. S.] June, 1869. [No. 6

# நற்கொடை.

## சீதனத்தினலாகுந் தீமைகள்.

ஒரு பெண்பிள்ளைக்கு ஓர் புருஷனைச் சம்பாதிக்கும்படி பெற்றார் சீவியகாலத்தில் அவர்கள் ஆஸ்தி முதலியவையைப் பங்கிட்டுத் தருவதே சீதனம். இது யாழ்ப்பாணத்தாருட் பொதுப் பழக்கம். இது மகா பெரிய தீமை. இந்தத் தீமை கிறிஸ்த சபையையுங் கெடுக்க ஏதுவாயிருக்கிறது.

நமது வீடுகளையும், நிலங்களையும், பிள்ளைகளையும், குடும்ப சமாதானத்தையும், வரவர நாசப்படுத்தும் இப்பெரிய தீமையைப் புத்திதெளிந்தவனாய்க் கவனித்துப் பார்ப்பது எவனுக்கும் மகா அவசியமல்லவா?

சிநேகிதா, சீதனத்திற்குரிய தீமைகளைச் சற்றே கவனித்துப்பார்.

### க. விவாகத்தின் இயல்புக்கும், நோக்கத்திற்கும், சீதனமே விரோதம்.

ஸ்திரிபுருஷர் இருவரும் ஆயுள்பரியந்த முறைப்படி ஐக்கியப்படுவதே விவாகம். விவாகநிலைமை மனப்பாக்கியமுள்ளதாயிருக்கும்படி ஸ்திரிபுருஷர் ஏகசிந்தையுள்ளவர்களாய்இருக்கவேண்டும். இல்வாழ்க்கைக்குரிய இந்த ஏகசிந்தைக்குக் குடும்ப நற்பழக்கங்கள் அவசியமாயிருப்பதன்றி, நேசம், விவேகம் முதலிய நற்குணங்களும் மிகவும் அவசியம். சீதனம் பிரதானமென்று எண்ணுகிறவன், பெண்பிள்ளை, படிப்பாளியா? என்றும், தேக சவுக்கியமுள்ளவளா? என்றும், நற்குணசாலியா? என்றும், இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை நிறைவேற்றக்கூடியவளா? என்றும், கொஞ்சமாயினும் விசாரியாமல், இறைசாலெத்தனையென்றும், பரப்பு எத்தனை என்றும், நகை எவ்வளவென்றும், சாதிமகிமை எவ்வகை

என்றும், வாஞ்சையாயும் நுட்பமாயும் ஆராய்ந்தறிய முயலுவான். தேவன் நியமித்த திருவிவாகநிலைமை இதினாலே எவ்வளவு அவமதிக்கப்படுகிறது! சிருஷ்டிகர் ஆதிமனுஷனுக்கு ஸ்திரீயைக் கொண்டுவந்தநேரத்தில் சீதனத்தைக்கொடாமல் ஓர் ஏற்ற துணையையே கொடுத்தார், அல்லவோ?

## உ. ஸ்திரிபுருஷரின் மனப்பாக்கியத்தைச் சீதனமே கெடுக்கும்.

பாக்கியமற்ற குடும்பம் ஓர் சிறுநரகம். ஸ்திரிபுருஷர் அன்னியோன்னியமாயிராவிட்டால் முடிவில்லாச் சண்டை உண்டாகும். சமாதானம் ஒழியும். மனப்பாக்கியங்கெடும். ஸ்திரிபுருஷர் குடும்பநடையில் ஐக்கமாயிருப்பது எவ்வளவு இலட்சணமான காட்சி. அந்த மனப்பாக்கியத்திற்குக் காரணமேது? பணமோ? தரையோ? தானியமோ? நகையோ? சீ! சீ! முட்செடிகளிற் திராட்சப்பழங்களையும் முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறவர்களுண்டா? வாசிப்பவனே, உனக்கு எப்படித் தோன்றுகிறது? பணத்தினால் மனப்பாக்கியம் வருமென்று எண்ணுகிறவன் காரணகாரிய சம்பந்தம் இல்லையென்றிருக்கிறான். களைத்தபுருஷன் தன்வீட்டுக்குத் திரும்பிவரும்போது பெற்றசீதனமோ? ஏற்றபோசனமோ? களையைத்தீர்க்கும். பிரயாசத்தினாற் கலங்கும் புருஷனின் மனதிற்குப் பெற்ற சீதனமோ? ஏற்றவசனமோ? ஆறுதல்தரும். வியாதியாய்க்கிடக்கிற புருஷனுக்குப் பெற்றசீதனமோ, ஏற்ற ஆதரவோ, சுகத்தைத்தரும்? பிறரால் உபத்திரவப்படும் புருஷனுக்குப் பெற்றசீதனமோ, ஏற்றயோசனையோ, மனரம்மியத்தைத்தரும்? குடும்ப பாக்கியத்திற்கு ஏற்ற காரணத்தைப்பாராமல், சீதனமே அதற்குக் காரணமென்று எண்ணுகிற எண்ணம் ஸ்திரீ புருஷன் பாக்கியத்தை முழுவதுங் கெடுக்கும் என்பதே பிரத்தியட்சம்.

## ௩. பெற்றார் தங்கள் பிள்ளைகளைத் துற்பழக்கங்களில் வளர்க்கிறதற்குச் சீதனமே ஓர்காரணம்.

சுக்கான், நங்கூரம், பாய்மரம் முதலியவை வேண்டாமென்று காற்றுங் கடலும் இஷ்டப்படி கப்பலைக்கொ

ண்டுபோக விடுகிறவனை ஒருமாலுமியென்று சொல்லலாமா? சொல்லப்படாதென்பீர்கள். அதுபோலப் பிள்ளைகளைக் கெடுக்கும் பழக்கங்களுக்கு அவர்களை ஒப்புக்கொடுக்கிறவன் பிள்ளைகளை வளர்க்கிறவனென்று சொல்லலாமா? பணம் காணிமுதலியவைகளைப் பற்பல உபாயங்களினால் தேடுவது பிரதான கடமையென்று பெற்றோர் கற்பிக்கிறதற்கிசைய நடக்கிற பிள்ளை துற்குணனாக மாட்டானா? பார், பெற்றோருடைய பணத்தைக்கவர்ந்து, பெற்றோர்கட்டின வீட்டிற்றானே வசித்துச், சீதன அநுபோகமாயிருக்கும் பிள்ளை பெற்றோரை விசாரித்திருப்பானா? அவர்கள்சொல்லுக்குக் கீழமைந்திருப்பானா? பிள்ளைகளை வளர்த்த பிரகாரமே பெற்றோர் பயன்பெறுகிறார்கள். இது இவ்வூருக்கு இலட்சணமோ, கேடோவென்று சொல். சீதனவிவாகம் பணவாஞ்சையைக்கொண்டு பெற்றோரை நேசிக்கும் நேசத்தைப் பிள்ளைகளினிருதயங்களிலிருந்து நீக்கி நாசப்படுத்தும்.

**௪. பிறர் நயத்தையழித்துத் தன்நயத்தை மாத்திரமேதேடும் விருப்பத்தைச் சீதனமே பிறப்பிக்கும்.**

“உன்னில் அன்புகூருவதுபோலப் பிறனிலும் அன்புகூருவாயாக” என்பது தேவன் எவனுக்குங் கடமையென்று கட்டளையிட்டிருக்கிறார். தன் நயத்தைமாத்திரக் தேடுவது இந்தக்கட்டளைக்கு விரோதம். அடுத்தவனுடைய வீடு பற்றியெரியும்போது உதவிசெய்யாமற் தன் வீடு எரியாமலிருப்பது போதுமென்றிருக்கிற அயலான் துரோகியல்லவா? பயணக்காரரில் ஒருவன் குழியில்விழும்போது அவனுக்கு உதவிசெய்யாமல், ஒகோ! நான் தப்பினேன் போதும் என்றிருக்கிற வழிப்போக்கன் துரோகியல்லவா? சிநேகிதனொருவன் முட்டுப்படும்போது அவனாலே பல நன்மைபெற்றவன் பிரதிநன்மை செய்யாமல், ஒகோ! அவன்கேடெனக்குவரவில்லையேயென்றிருக்கிற அச்சிநேகிதன்துரோகியல்லவா? இப்படியிருக்கத் தன் உயிர் ஆஸ்தி எல்லாவற்றிற்குங் காரணராகிய பெற்றோருக்குப் பிள்ளைகள் நன்மைசெய்யாமலிருப்பது பெற்றோர் துரோகமல்லவா? சீதனமே

பிள்ளைகள் தங்கள் நயத்தைமாத்திரம் தேடுவதற்கும் பெற்றார் நயத்தைக் கவனியாதிருப்பதற்கும் பெலத்த ஏவுதலானதால், எல்லாப்பாவங்களிலும் பெரும்பாவமாகிய பெற்றார் துரோகத்திற்கு அச் சீதனமேகாரணமாகும்.

**௫. பிள்ளைகள் பெற்றாருக்குக் கோடியராக நடக்கும்படி சீதனமே பலத்த ஏவுதல்.**

“உங்கள்சத்துருக்களை நேசியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்,” என்று சற்குரு போதித்தார். நேசவீனம் மனுஷனுக்கு அவலட்சணம். காட்டுமிருகம் நேசக்குறைவுள்ளபடியாற் துஷ்டமிருகமென்னப்படும். ஆயினும் துஷ்டமிருகமோ அளவுக்குமிஞ்சி இரைதின்னாது, அதன்கூட்டாளிகளுக்குப் பங்குவிடும். சீதனவாஞ்சையாற் கெடுக்கப்பட்ட பிள்ளைகளோ அளவுக்குமிஞ்ச அனுபோகங்கொண்டிருந்தும் தங்கள் பெற்றாருக்கு எச்சமேனும் விடார்கள். இது மெய்யல்லவோ ! இதைவிடக் கொடுமையுண்டோ?

**௬. குடும்பங்களுக்குரிய சம்பந்தங்கள்யாவையும் புரட்டுவதுபோல நாகரீக சம்பந்தங்களையும் சீதனமே புரட்டும்.**

குடும்பம் எப்படியோ இராச்சியமப்படி. குடும்பத்தில் வளர்க்கப்படும் பிள்ளைகள் தாய்தகப்பன்மாருடைய அதிகாரத்தைப்புரட்டினால் அவர்கள் இராச்சியபிரசைகளாகும்போது இராச்சிய ஆளுகையைப் புரட்டுவார்கள். குடும்பகலகம் இராச்சியகலகத்திற்கு ஏதுவாயிருக்கும். “பிள்ளை நடக்கவேண்டியவழியிலே அவனை நடத்து. முதிர்வயதிலும் அதைவிடான்,” என்னும் பழமொழி குடும்பத்தின் மேன்மையைக் காட்டும். குடும்பத்திலிருக்கிற புத்திரன் பெரியசீதனமுள்ள பெண்பிள்ளைகளைத் தேடுவதும், அக்குடும்ப புத்திரிகள் தங்களுக்கு எவ்வளவு சீதனங்கிடைக்குமென்று பெற்றாருடன் வினவுவதும் வெட்கிக்கத்தக்க ஓர் காரியமல்லவா? இது எக்குடும்பத்தில் நடக்குமோ பணவாஞ்சை அக்குடும்பத்தையாளும். அப்பொழுது, மனச்சாட்சி, நேர்மை, யோக்கியம், தயாளம் முதலிய நற்குணங்களெல்லாங் கெடும். இராச்சியத்தார் இப்படியிருக்கில் புரளி,

திருட்டு, கொலைமுதலிய கலகதுரோகங்களெல்லாம் பிரபலியமாகும். சீதனவாஞ்சையே இவைகளையெல்லாம் தூண்டிவிடும்.

ஏ. பெற்றார்கையிலிருக்கும் ஆஸ்தியானவையும் கேட்பதுமன்றி அவர்கள் உழைப்பினாற் சம்பாதிக்கப்போகிற யாவையுஞ் சீதனமே கேட்கும்.

இரண்டுமூன்று பெண்பிள்ளைகளைப்பெற்ற ஒருபிதா இருந்தான். தன்னாற் கூடியவிதமாய்ப் பிரயாசப்பட்டு உழைத்தயாவையும் முதலாம்பிள்ளைக்குச் சீதனமாய்க் கொடுத்ததன்றி, மாப்பிள்ளையின் சீதனவாஞ்சையைத் திருத்திப்படுத்துவதற்குப் பிதா பெறும் மாதச்சம்பளத்தில் அரைவாசியை இரண்டுவருஷக்காலமாகக் கொடுக்க உடன்பட்டான். அந்தக்குடும்பம்முழுதுங் கெட்டுப்போனது ஆச்சரியமா? தாய் மனது துயரங்கொண்டு மரித்தாள். தகப்பன் வெட்கத்தினாற் தூரதேசத்திற் கோடினான். மற்றப்பிள்ளைகள் சீதனமில்லாமல் வறுமையாய்த் திரிந்தார்கள். மாப்பிள்ளையுடைய பணவாஞ்சைக்கும், அவன்கட்டின பெண்ணின் மனக்கடினத்திற்கும், பிதாவின் மடைத்தனத்திற்கும், மாதாவின் அகோர துக்கத்திற்கும், மற்றப்பிள்ளைகளின் முழுவறுமைக்கும் சீதனமே காரணம் அல்லவோ? ஆட்டுமந்தையிற் நுழையும் கோனாயைத் துரத்துவதுபோலச் சீதனவழமையைத் துரத்துவது நியாயமல்லவா?

அ. ஸ்திரியானவளுக்குப் புருஷனடிமையாகவும், வேதமுறைமைக்கு விரோதமாய் அவள் அதிகாரத்தைச் செலுத்தவும், சீதனம் ஏதுவாயிருக்கின்றது.

“ஓர் வீடு தனக்கு விரோதமாயெழும்பினால் அது நிலைநில்லாது.” மாலுமி சொல்வதைக்கேளாத கப்பற்காரர் சேதமடைவார்கள். சேனாபதி கட்டளையை அசட்டைபண்ணும் படை தோற்றுப்போம். அதுபோலப் புருஷனுடைய அதிகாரம் குடும்பத்திற் செல்லாவிட்டாற் குடும்பமே சேதிக்கப்படும். தலையற்ற உடல் பார்வைக்கு இலட்சணமோ? புருஷனல்லவோ குடும்பத்தித்தலை. புருஷனைத்தள்ளும் ஸ்திரி தன் சிரசைச்

சேதிக்கிறாள். இதோ அதிசயம். கதவைத்தட்டுகிறான்; உட்பிரவேசிக்கக்கெஞ்சுகிறான். போசனத்தைப்பெற வேண்டுகிறான். ஆர்! பெண்சாதியால் தூரத்தப்பட்ட ஓர் புருஷன். இது யாழ்ப்பாணத்துக்கு இலட்சணமா? வேதமுறைமையா? நல் ஒழுக்கமா! "மனைவிகளே, உங்களுங்கள் சொந்தப்புருஷருக்கே கீழமையுங்கள்" என்று தேவனிட்ட கட்டளைக்குக்கீழமைதலா? இப்படிக்கொத்த குடும்பத்தவறுகளுக்குச் சீதனமே ஏவுதல்.

௯. நல்மனைவிகளுக்கேற்ற கடமைகளைச் செய்யக்கூடியவர்களாயிருக்கிற நற்குணமுள்ள அநேக ஸ்திரீகள் பணக்குறைமாத்திரத்தினால் விவாகமில்லாமல் விடப்படுகிறார்கள்.

"இருளுக்கும் ஒளிக்குஞ் சம்பந்தமென்ன" என்று வேதியரொருவர் கேட்கிறார். யாழ்ப்பாணத்தாரே, நினைத்துப்பாருங்கள். இங்கிலீஷ் பாஷையிலும் தமிழ்ப்பாஷையிலுஞ் சாஸ்திரங்களைப்படித்த ஒருவன் சீதனத்தினிமித்தம் அரிவரியளவாய்ச் சாஸ்திரம்படியாத ஒருபெண்ணை விவாகஞ்செய்தால் இவ்விருவரும் எந்தச் சாஸ்திரத்தைக்குறித்துச் சம்பாஷிப்பார்கள். இலக்கிய இலக்கணம் படியாத பெண்ணோடே சாஸ்திரி சோறு கறி முதலியவையைப்பற்றிமாத்திரம் பேசக்கூடும். இவன் பெண்சாதியைக்குறித்து நாள்தோறும் வெட்கிக்கிறான். பெண்சாதி அவனுடைய சாஸ்திரம் பயித்தியமென்று எண்ணுகிறாள். இப்படியே இருவரும் நாள்தோறும் பேச்சிற் சிக்கிக்கொள்ளுகிறார்கள். சீதனச்செயல் இதுவே. அடுத்தவீட்டில் மனதை அலங்கரிக்குஞ் சாஸ்திரங்களைப்படித்த ஓர்பெண்பிள்ளை சீதனமில்லாததினிமித்தம் இவனால் வெறுக்கப்பட்டாள். பார், இவளுக்கேற்ற புருஷனில்லாததினாற் துக்கமுண்டு. அவனுக்குத் தகாத மனைவியிருக்கிறபடியினால் அவனும் ஓயாமற் கிலேசப்படுகிறான். இப்படி ஒவ்வவேண்டியதைப் பிரிக்கிறதும், ஒவ்வாததைக் கூட்டுவதுஞ் சீதனமே.

௰. பெண்பிள்ளைகள் கல்வித்தேர்ச்சியை அடைவதற்குச் சீதனமே பெரியதடை.

இலாபமென்ன? பிரயோசனமென்ன? விளைவென்ன? என்று வர்த்தகன், தோட்டக்காரன். வேளாளன் கேட்பதுண்டு. சீதனத்தைக்கொண்டுபுருஷனைச்சம்பாதித்தஓர்பெண்மாதாவாகும்போது தன்பிள்ளைகளுக்குப் படிப்பேன்? சாஸ்திரம் ஏன்? கல்வி ஏன்! இவர்களுக்குச் சீதன ஆஸ்தியில்லையோ? இத்தனை நகை, தரை முதலியவை மாப்பிள்ளைக்குப் போதாதா? என்றுசொல்லித் தன்பிள்ளைகளைப் பள்ளிக்குவிடாள். "நூலைப்போலச் சீலை, தாயைப்போலப் பிள்ளை" என்ற பழமொழி நிறைவேறும். இது சீதனத்தின் மகத்துவம்.

**கக. அவமார்க்கச்செல்வருள் ஓர் மனைவியைத் தேடும்படி சீதனமே ஓர் கிறிஸ்தவனையும் இழுக்கும்.**

"பிணம் எங்கேயோ அங்கே கழுகுகளுமுண்டு." சீதனத்தைத்தருவோம், தருவோம், என்று பிரசித்தப்படுத்துகிற அவமார்க்கச்செல்வர் சீதனத்தைத்தேடும் கிறிஸ்தவர்களையும் இழுப்பார்களல்லவோ. இவ்வாசையினால் யாழ்ப்பாணத்துக் குடும்பங்களுள் எத்தனையோ வேதனை. பெண்பிள்ளை பிள்ளையாரையும், ஆண்பிள்ளை கிறிஸ்துநாதரையும், தேவனென்று பின்பற்ற முயலுவார்கள். ஐயோ! ஐயோ! விக்கிரகாராதனையையும், மெய்த்தேவாராதனையையும் ஒரே ஓர் பலிபீடத்தின்மேற் செலுத்தலாமா? இவர்கள் எந்தவேதத்தை வாசிப்பார்கள்? எந்த மோட்சத்தைத் தேடுவார்கள்? எந்தநம்பிக்கையினாற் களிகூருவார்கள்? சுற்றிப்பார், மனப்பாக்கியமற்றுத் திரிகிற இப்படிப்பட்ட புருஷர் யாழ்ப்பாணத்தில் எத்தனை? இவர்களில் ஒருவன் "நான் நரகபாதாளத்தில் விழுந்தேன்" என்று தன்னைக்குறித்துச் சாட்சியிட்டான். சீதனவாஞ்சையே நரகாக்கினிபோல் இப்படியோர் குடும்பத்திலெரியும்.

**கஉ. பெண்ணாய்ப்பிறப்பது அவமேன்று எண்ணிச் சிலவிடங்களிலே பெண்பிள்ளைகளைக் கொலைசெய்யச் சீதனமே ஏவும்.**

ஓர் ஆயிரம் இறைசாலைமாத்திரம் சம்பாதித்த நான் என்னசெய்வேன்? இச்சணமே மூன்றும் பெண்பிள்

லாயும் பிறந்தது. நான் என்னகுற்றஞ்செய்தேன் ? எங்
கேயோடுவேன்? சுவாமியேயென்று ஒலமிடுகிறவன் யா
ழ்ப்பாணத்திலில்லையா ? பெண்பிள்ளைகளைப்பார்க்க ஆ
ண்பிள்ளைகள் மிகவும் அபேட்சிக்கப்படுகிருர்களல்ல
வா ? என் ! சொல்லு; சீதனமல்லவா இதற்குக்காரணம்.
வடதிசையிலுள்ள இராசபுத் என்னும் கோத்திரத்தார்
ஆயிரமான தங்கள் பெண்பிள்ளைகளைப் பிறப்பிலே கொ
ன்றுபோட்டதேன் ? சீதனத்தினுற் தங்கள் ஆஸ்திகுறை
யாதபடியல்லவோ? அங்கே அவர்கள் துலாம்பரமாய்
ச்செய்த தீமை இங்கே இரகசியமாய்ச்செய்ய வவும்
அல்லவா ?

இத்திரளான தீமைகளுக்குக் காரணமாகிய சீதனவா
ஞ்சை நாக சிங்கக்குட்டியல்லவோ! அதன்வாயில் அகப்
படவிரும்புவான் என்? தற்கொலை பாவமல்லவா ? பெ
ற்ருரே, பிள்ளைகளே, ஏகமாய் எழும்புங்கள். அத்திர
சத்திரங்கள் யாவையும் பிடித்துக் கெர்ச்சிக்கிற இச்சிங்
கத்தைக் கொன்றுபோடுங்கள். தாய்தகப்பன்மார் சம்பா
தித்த ஆஸ்தியை அவர்கள் ஆயுள்மட்டும் அனுபவிக்க
விடுங்கள். அவர்கள் காலஞ்சென்றபிறகே சுதந்திரத்
தைப் பங்கிடுங்கள். அப்பொழுதே யாழ்ப்பாணத்துச்
செழிப்புப் பரந்தோங்கும்.

"அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம்
பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுள."

Printed at the Jaffna Religious Tract Society, by Strong & Asbury, Jaffna, 1868.
Edition 5,000.